www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



M-ESC-D-TML

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம்<br>*Time Allowed : **Three** Hours* | மொத்த மதிப்பெண்கள் : **250**<br>*Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவுசெய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடரவேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

www.prepp.in

## SECTION A

**Q1.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) “எழுகுளிறு மிதித்த ஒரு பழம்; பெருந்தேன் – இழைக்கும் நாடன்; நல்வோள் கணவன் இவன்” ஆகிய தொடர்களைக் குறுந்தொகை கொண்டு விளக்குக. *10*

(b) “அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்” என்பதை ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கூற்றின்வழி ஆராய்க. *10*

(c) “காலம் அறிந்து செயின், தீரா இடும்பைத் தரும்; உள்ளத்து அனையது உயர்வு” ஆகியன உணர்த்தும் செய்திகளைச் சுட்டுக. *10*

(d) கும்பகர்ணன் இராமனிடம் கூறிய சினமொழிகளை எடுத்துரைக்க. *10*

(e) இறைவனின் பெருமைகளாக மாணிக்கவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் குறிப்பிடுவனவற்றைப் புலப்படுத்துக. *10*

**Q2.** (a) குறிஞ்சித்திணையில் கபிலர் உணர்த்தும் செய்திகளைக் குறுந்தொகைவழி விவரி. *20*

(b) சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை கூறும் ஆய மகளிர் செயல்களை விளக்குக. *15*

(c) திருக்குறள் உணர்த்தும் அவையறிதலை விளக்குக. *15*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q3.** (a) சிலம்பில் வேட்டுவவரி உணர்த்தும் பண்பாட்டு வாழ்வியல் நிகழ்வுகளை விவரி. *20*

(b) "ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி" ஆண்டாள் உணர்த்தும் செய்திகளைப் புலப்படுத்துக. *15*

(c) அற உள்ளம் கொண்டவன் கும்பகர்ணன் என்பதை விவரி. *15*

**Q4. கீழ்வரும் பாடற்பகுதிகள் பயிலும் இடத்தையும் அவற்றின் இலக்கிய நயத்தையும் விவரி :**

(a) "தலைவிக்கு மதிப்பு செய்தான்;
தாய்மைக்கு வணக்கம் செய்தான்." *20*

(b) "கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவை போல." *15*

(c) "வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்." *15*

www.prepp.in

## SECTION B

**Q5.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணனைத் தன் சீடனாக நினைத்துப் பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக. *10*

(b) முத்துப்பட்டன் கதை உணர்த்தும் மானுட நெறியினை விளக்குக. *10*

(c) சித்திரப்பாவையில் சுந்தரி எனும் பாத்திரப்படைப்பினை விளக்குக. *10*

(d) மு.வ. வின் தேர்தல் குறித்த சிந்தனைகளை விவரி. *10*

(e) பாரதிதாசன் குறித்து அறிஞர் அண்ணா குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரைக்க. *10*

**Q6.** (a) மானுடச்சிந்தனைகளை ஜெயகாந்தன் பதிவு செய்துள்ளதை குருபீடம் சிறுகதை ஒன்றின்வழி விவரி. *20*

(b) “சொல்வன்மை” எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை விவரி. *15*

(c) தொண்டுள்ளம் குறித்துக் குடும்ப விளக்கு உணர்த்துவனவற்றை விவரி. *15*

**Q7.** (a) “அன்னை ஒப்பாய் எனக்கு
அத்தன் ஒப்பாய், என் அரும்பொருளே !”
என்று மாணிக்கவாசகர் வேண்டுவனவற்றைப் புலப்படுத்துக. *20*

(b) அறிஞர் அண்ணாவின் சமுதாயச்சிந்தனைகளை விவரி. *15*

(c) நூற்றைந்து ஆண்டுகள் நல்வாழ்வு வாழ குடும்ப விளக்கு கூறும் காரணங்களை விளக்குக. *15*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

| | | | |
|---|---|---|---|
| **Q8.** | (a) | அறத்தின் ஆட்சி குறித்து டாக்டர் மு.வ. கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க. | *20* |
| | (b) | மலையருவி காட்டும் தாலாட்டுப் பாடல்களின் சிறப்பினை விவரி. | *15* |
| | (c) | சித்திரப்பாவையின் பாத்திரப் படைப்புகளின் சிறப்பினைத் தொகுத்துரைக்க. | *15* |